**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 143 /2015

PW-6 30-05-2024

| | |
|---|---|
| Name | சிவக்குமார் |
| Father's/Husband's Name | வடிவேல் |
| Village | கோவில்பட்டி |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | – |
| Calling | பொது மருத்துவ ஆலோசனை மருத்துவர் |
| Religion | – |
| Age | 38 |

(A1,A2 present.)

<u>**முதல்விசாரணை**</u>

1) நான் தற்போது கோவில்பட்டி தியான் ஹெல்த்கேர் மருத்துவமனையில் பொது மருத்துவ ஆலோசனை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.10.2013 அன்று நான் ஆர்த்தி மருத்துமனையில் பணியாற்றிய போது திரு.நாராயணசாமி 32 வயது ஆண் என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார்.

2) சிகிச்சையின் போது அவரது முகத்தில் பலமான காயம் காணப்பட்டது. அவருக்கு ஸ்கேன் எடுத்து பார்த்ததில் அவர் வலது கண்புருவம் , தாடை போன்றவற்றில் எலும்பு முறிவு காணப்பட்டது. அவருக்கு அதற்குரிய சிகிச்சைக்காக 3 நாட்கள் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து பின்னர் நல்ல முறையில் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

3) மேற்கூறிய காயத்திற்கான காரணத்தை கேட்ட போது 02.10.2013 அன்று தனக்கு தெரிந்த 3 நபருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது காயம் ஏற்பட்டதாக கூறினார். அதற்குரிய சிகிச்சையை முதலில் அரசு

மருத்துமனையில் செய்ததாகவும் மேல் சிகிச்சைக்காக என்னிடம் வந்ததாக தெரிவித்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வரும்போது அரசு மருத்துமனையில் சிகிச்சை எடுத்ததற்குரிய ஆவணங்கள் எதையும் என்னிடம் காட்டவில்லை என்றால் சரிதான் , வாய்மொழியாக கூறினார்.

2) காயம் எதனால் ஏற்பட்டது என்று காயம்பட்டவரிடம் விசாரித்தேன். சட்டம் – மருத்தும் சார்ந்த வழக்கு என்பதால் போலிசாருக்கு தகவல் கொடுத்தேன். அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் ஆகிய ஆவணங்களை போலிசாரிடம் ஒப்படைத்தேன்.

3) அவருக்குரிய டிஸ்சார்ச் சம்மரியையும் போலிசாரிடம் ஒப்படைத்தேன். காயம்பட்டவர் 3 நாட்கள் தான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் தாடைப்பகுதியில் முறிந்த  எலும்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

4) அந்த எலும்பு மென்மையான மெல்லிய எலும்பு என்றால் சரிதான். அந்த எலும்புகள் தாடைக்கு மேல் உள்ள பகுதியில் சுற்றியுள்ள எலும்புகள் . எலும்புக்கு மேல்பகுதியில் செல்லும் என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு நரம்புகளில் பாதிப்பு இல்லை என்றால் , முதல் சிகிச்சையின் போது காணப்படவில்லை.

5) எலும்பில் பாதிப்பு ஏற்பட்டால் நரம்பிலும் பாதிப்பு ஏற்படும் , நரம்பு பாதிக்கவில்லை எலும்பு மட்டும் பாதித்திருந்ததாக கூறுவது அய்யத்திற்கு இடமான ஒன்று என்றால் சரியல்ல. இரண்டு எலும்புகள் மென்மையான மெல்லிய எலும்பு என்பதால் கடினமான பொருளின் மீது மோதினால்  உடைய வாய்ப்புண்டு என்றால் ஒரு எலும்பு கடினமான எலும்பு , கடினமான பகுதியில் மோதினால் ஏற்பட வாய்ப்புண்டு. காயம்பட்டவருக்கு அறுவைசிகிச்சை செய்யப்படவில்லை.

6)பொதுவாக எலும்பு முறிவு காயம் குணமாவதற்கு குறைத்தது 3 வாரங்கள் ஆகும். அவர் 3 வாரங்கள் சிகிச்சையில் இல்லை என்றால் சரிதான். அதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் எலும்பு முறிவு உள்ள காயம் என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கை தவறானது என்றால் சரியல்ல.

7) கோவில்பட்டி அரசு மருத்துமனைக்கு காயம்பட்டவருக்கு நான் அளித்த சிகிச்சை பற்றிய அறிக்கையை அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு அனுப்புவது வழக்கம் இல்லை.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**மறுவிசாரணை இல்லை**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.